1992 மார்ச் 31]

உயர்ந்து கொண்டிருக்கிற காரணத்தால், இரண்டு கப்பல்கள் 40,000 டன் கொள்ளளவு கொண்ட கப்பல்களை வாங்குவதற்கும் 65,000 டன் கொள்ளளவு கொண்ட கப்பல் ஒன்றை-அது தானாக கரிகளை இறக்குவது போன்ற ஆட்டோமேட்டிக் சிஸ்டத்துடன கூடிய கப்பல் ஒன்றை—வாங்குவதற்கு அரசின கோப்பு ஆய்வலே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 406. டாக்டர் எஸ். சுந்தரராஜ். மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்.

406—

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் தள்ளுபடி.

*2257—டாக்டர் எஸ். சுந்தரராஜ்:

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் தள்ளுபடித் தொகை 90 நாட்களுக்குள் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும்.

தள்ளுபடித் தொகையை துரிதமாக வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, கேட்டபோதெல்லாம் அதிக நிதி உதவியை ரிபேட்டுக்குக் கொடுத்து எந்த வருடமும் இல்லாத அளவிற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களது அரசு 1991-92 ஆம் ஆண்டுக்கு 51 கோடி வழங்கியுள்ளது. அது மட்டுமல்லாமல் 1992-93 ஆம் ஆண்டுக்கு பட்ஜெட்டில் 42 கோடி ஒதுக்கியுள்ளது. இந்த மாதிரி நிதி ஒதுக்கீடு கொடுத்தும் குறிப்பாக இந்த நிதி ஒதுக்கீடு மார்ச் கடைசியில் தான் அதிகமாக பிரைமரி கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கிடைக்கிறது. இதனால் ஒவ்வொரு பிரைமரி கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் வருடத்திற்கு 10 இலட்சத்திற்கு மேல் வட்டியாக பேங்கிற்கு கட்டவேண்டியுள்ளது. ஆகவே தொடர்ந்து

கைத்தறி நெசவாளர்களுக்கு வேலை கொடுக்கவும் இந்த வட்டி விகிதத்தைக் குறைக்கவும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களது அரசு 3 மாதத்திற்கு ஒரு முறை இந்த ரிபேட் தொகையை கூட்டுறவுச் சங்கங்களுக்கு கிடைக்க வழிவகை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவாகளே, தள்ளுபடி காலங்களில் அறிவித்த பிறகு சங்கங்கள் கோரிக்கைகளை உரிய முறையில் தயாரித்து சம்பந்தப்பட்ட கைத்தறி ஆய்வாளர் கோரிக் களைப் பரிசிலித்து தக்க சான்றிதழ்களோடு உதவி இயக்குநருக்கு அனுப்பப்படுகின்றன. உதவி இயக்குநர் அலுவலகத்தில் இக்கோரிக்கைகள் சிலவற்றை நேரடியாகவே விசாரணை செய்தும் மற்ற கோரிக்கைகளை எல்லாம் பரிசீலித்தும் அவைகள் இயக்குநர் அவர்களுக்கு அனுப்ப இவைகளுக்கு ஏறத்தாழ 75 நாட்கள் தேவைப்படுகின்றன. பின்னர் கைத்தறி இயக்குநர் அலுவலகத்தில் இவைகளைப் பரிசிலித்து இவ்விரண்டு நடைமுறைக்கு 90 நாட்கள் தேவைப்படுகின்றன. மேலும் பிரதம நெச வாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பொதுத்துறையின் விலையில் மாநில அரசு மத்திய அரசின் பங்குத் தொகை யைச் சேர்த்து வழங்குகிறது. தள்ளுபடி மானியம் வழங்கப் பட்ட பின்னர் உரிய சான்றுகள் மத்திய அரசுக்கு அனுப்பப் படுகிறது. அதன் பின்னர் மத்திய அரசினுடைய மானியம் பெற்ற பின்னர் அத்தனை நடவடிக்கைகளும் முடிய ஏறத்தாழ 90 நாட்கள் தேவைப்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எஸ். சுந்தர ராஜ், கேள்வியாகக் கேளுங்கள்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இண்டரஸ்டு சப்சிடிக்கு மட்டும் வருடந்தோறும் 3 கோடி ரூபாய் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்குகிறார்கள். இந்த ஆண்டு 10 கோடி ரூபாய் இண்டரஸ்டு சப்சிடிக்கு ஒதுக்கப்பட் பட்டுள்ளது. ஆகவே இந்த இண்டரஸ்டு சப்சிடி அக்ரி கல்சர் செக்டாருக்கு 4 சதவீத வட்டி கொடுப்பது போல கைத்தறி நெசவாளர்களுக்கு இந்த கோ-ஆப்பரேட்டிவ் வங்கிக்கு.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சம்பந்தம் இல்லாத கேள்வி. தனிக் கேள்வி போடவும். திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்.

1992 மார்ச் 31]

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்குத் தனியாக கூட்டுறவு வங்கி அமைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிக் கேள்வி போடவும்.

வினா எண். 407. திருமதி கவிநிலவு தர்மராஜ், இருக்கையிலில்லை.

வினா எண். 408. திருமதி செ. சுந்தராம்பாள், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

408—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

* 257—திருமதி செ. சுந்தராம்பாள் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மேட்டூர் தொகுதி நங்கவள்ளி ஒன்றியத்தில் ஜல கண்டாபுரம், நங்கவள்ளி, வனவாசி மற்றும் சுற்றியுள்ள அனைத்து கிராமங்களுக்கும் பூலாம்பட்டியிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் பாதுகாப்பான குடிநீர் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நங்கவள்ளி ஒன்றியத்திலுள்ள ஜலகண்டாபுரம், நங்க வள்ளி, வனவாசி பேரூராட்சி மற்றும் 2,016 குடியிருப்பு களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் 38 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ளது. விரிவான மதிப்பீடு களுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்னர் களப் பணிகள் துவங்கப்படும்.

திருமதி செ. சுந்தராம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பணிகள் தொடங்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது தொகுதியிலுள்ள நங்கவள்ளி ஒன்றியத்தைச் சேர்ந்த ஜலகண்டாபுரம், நங்கவள்ளி, வனவாசி அதனைச் சுற்றி யுள்ள கிராமங்கள் மேட்டுப் பாங்கான பகுதியில் இருப்பதால் அங்கே குடிநீர் கிடைக்காமல் மக்கள் பெரிதும் அவதிப் படுகிறார்கள். தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக